குண்டு மிளகாய் விலை "விர்'

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2011,23:48 IST

திருவள்ளூர் : குண்டு மிளகாய் விலை ஒரே மாதத்தில் கிலோவுக்கு 40 ரூபாய் உயர்ந்துள்ளது.தற்போது சம்பா பருவத்தில், மிளகாய் விளைச்சல் மிகவும் குறைந்து விட்டது. மேலும், ஆந்திர மாநிலத்திலும் விளைச்சல் குறைவால் மிளகாய் வரத்து குறைந்தது. இதனால், தற்போது ரசத்துக்கு பயன்படுத்தப்படும் புது குண்டு மிளகாய் விலை ஒரே மாதத்தில் கிலோவுக்கு, 40 ரூபாய் அதிகரித்து உள்ளது.திருவள்ளூர் மாவட்டத்தில், கடந்த மாதம் கிலோ, 120 ரூபாய் வரை விற்கப்பட்டு வந்த புதுகுண்டு மிளகாய் தற்போது, 170 ரூபாய்க்கு விற்கப்பட்டு வருகிறது. குண்டு மிளகாயின் விலை திடீரென ஒரே மாதத்தில், 40 ரூபாய் உயர்ந்ததால் கிராமங்களில் வசிக்கும் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் ரசம் கூட வைக்க முடியாமல் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.

தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு

First Published : 19 Oct 2011 01:09:44 AM IST

சென்னை, அக். 18: தமிழகத்தில் பல இடங்களில் புதன்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கடந்த சில நாள்களாக இடி மின்னலுடன் கூடிய மழை பெய்து வருகிறது.

சென்னை மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை மழை பெய்தது.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி தமிழகத்திலேயே அதிகபட்சமாக சிவகங்கை, திருபுவனத்தில் 90 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): மதுராந்தகம், ராஜபாளையம் 80, வால்பாறை, சித்தம்பட்டி 60, தாம்பரம், மணியாச்சி, ஊட்டி 50, பெரியகுளம், ஆயக்குடி 40, புதுக்கோட்டை, கோவில்பட்டி, குளித்தலை, பாடாலூர், சமயபுரம், துறையூர், உசிலம்பட்டி,

கூடலூர், திருப்பத்தூர் 30, வந்தவாசி, முசிறி, தாத்தையங்கார்பேட்டை, நாங்குநேரி, சாத்தூர், சிவகாசி ஆகிய இடங்களில் 20 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

தமிழகத்தில் புதன்கிழமை பல இடங்களில் கனமழையும், கடலோர மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழையும் பெய்யும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

**அணைகளில் நீர்மட்டம் தொடர்ந்து உயர்வு**

First Published : 19 Oct 2011 12:00:00 AM IST

அம்பாசமுத்திரம், அக். 18: மழையால் அணைகளில் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வந்தாலும், அம்பாசமுத்திரம் பகுதியில் கார் பருவ சாகுபடி அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 20 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 30 அடியாகவும் குறைந்ததைத் தொடர்ந்து இவ்விரு அணைகளும் மூடப்பட்டன. இதனால், திருநெல்வேலி மாவட்டத்தில் குடிநீர் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இதற்கிடையே, கடந்த சில தினங்களாக இம்மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை பெய்து வருகிறது. இதையடுத்து பாபநாசம் அணையின் நீர்மட்டம் 3 தினங்களில் 13 அடி உயர்ந்தது.

செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 15 மி.மீ. மழையும், பாபநாசம் கீழ் அணையில் 2 மி.மீ. மழையும், சேர்வலாறு அணையில் 8 மி.மீ. மழையும், மணிமுத்தாறு அணையில் 1.4 மி.மீ. மழையும், கடனாநதி அணையில் 1 மி.மீ. மழையும், ராமநதி அணையில் 2 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

சின்னச்சின்ன செய்திகள்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2011,00:00 IST



**தோட்டக்கலைப் பயிர்களைப் பாதிக்கும் நத்தைகள்**: பாக்கு, ஏலம், மிளகு, வாழை, பப்பாளி, லெட்டூஸ், முட்டைக்கோஸ், கொய்மலர்கள், அழகு தாவரங்கள், கடலை, சோயாபீன்ஸ், மக்காச்சோளம் ஆகியன நத்தைகளுக்கு மிகவும் விருப்பமான பயிர்வகைகளாகும். இலைகளின் அடிப்பகுதியில் இருந்துகொண்டு இலைகளைத் தின்று 50 சதவீத சேதத்தை விளைவிக்கின்றன. இறுகிய மண் கண்டங்கள், இடுக்குகள், புதர்கள், குப்பை குவியல்கள் ஆகிய பகுதிகளில் மறைந்துகொண்டு இரவு நேரத்தில் பயிர்களைத் தாக்கும்.

**பாதுகாப்பு வழிகள்**: உழவியல் முறை: நத்தைகளின் தாக்குதலுக்கு எளிதில் உட்படும் தாவரங்களை 3 முதல் 5 மீட்டர் இடைவெளி விட்டு தள்ளி பயிர்செய்வதன் மூலம் நத்தைகளின் இடப்பெயர்ச்சியை தவிர்க்கலாம்.

**அழிக்கும் முறை**: கைகளால் பொறுக்கி அழித்தல் வேண்டும். பயிர் செய்யா காலங்களில் நத்தைகளின் மறைவுப்பகுதிகளைத் தேடி கண்டுபிடித்து களையலாம். மழைக்காலங்களில் ஈரமான சாக்குகளையோ (அ) இலைகளையோ குவித்து நத்தைகளை ஈர்த்து அங்கு வரச்செய்து பின்னர் கைகளால் பொறுக்கி அழிக்கலாம்.

**உயிரியல் முறை**: இயற்கையிலேயே நத்தைகளின் நடமாட்டத்தைப் பொறுத்து, இவற்றை உண்ணும் நத்தை வகை யூக்லாண்டினா, கோனாக்சிஸ் வகைகளும், நண்டு வகைகள் மற்றும் பூரான் வகைகள் காணப்படுகின்றன. ஆனால் செயற்கை முறையில் இதனைக் கட்டுப்படுத்த பயன்படுத்துவது சாத்தியமற்றது.

**வேதியல் முறைகள்**: சேதம் அதிகமுள்ள நிலப்பரப்பைச் சுற்றி 5 சதம் மேட்டால்டிஹைடு துகள்களைத் தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். இலை நத்தைகளிலுள்ள திரவப் பொருட்களை அதிகம் சுரக்கச்செய்து செயலிழக்கச் செய்கின்றன. பொதுவாக நத்தைகளுக்கு உப்பு என்றால் ஒவ்வாமை. பயிர் வளர்க்கப்படும் இடத்தைச் சுற்றிலும் உப்பு ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ இடுவதன் மூலம் இதன் செயல்பாட்டைக் குறைக்கலாம். **தகவல்**: முனைவர் டி.திலகம், முனைவர் ரா.அருள்மொழியாள், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு.

காய்கறி நாற்றங்கால் உற்பத்திக்கான குழித்தட்டில் விதையிடும் தானியங்கிக்கருவி: இக்கருவி கொண்டு ஒரு நாளைக்கு 600 தட்டுகள் விதை போட ஆகும் செலவு ரூ.350/- இதனால் பண சேமிப்பு 117 சதவீதம். ஆள் சேமிப்பு 60 சதவீதம். இதன் விலை ரூ.30,000.

சிறப்பியல்புகள்: நகரும் கச்சைமேல் வைக்கப்பட்ட குழித்தட்டில் முனைப்புக் கலவையை தானாகவே சரியான அளவில் நிரப்பி, விதைகளும் இடப்பட்டு கலவையினால் மூடப்படும் தன்மை; விதை முளைப்புக் கலவையை தேவையான அளவில் மெத்துதல்; ஊசி அமைப்பிலான விதையைப் பொறுக்கும் கருவி, விதையினை தட்டில் சீராக இடுதல்; விதைத்தட்டு கீழே இருப்பதை அறிந்து சரியான முறையில் விதைகளை இடுவதற்கான சிறப்புத்திறன்.

மேலும் **விபரங்களுக்கு**: பேராசிரியர் மற்றும் தலைவர், பண்ணைக்கருவித்துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல் கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003. போன்: 0422-661 1257.

**அடுக்குப்பயிர் சாகுபடி**: தென்னையில் ஊடுபயிராக வாழை, பாக்கு, கோகோ என ஆரம்பித்து ஒன்றரை ஏக்கரில் 50 தென்னை, 25 பெருநெல்லி, 460 கோகோ, 30 பாக்கு, 2 மா, 4 கொய்யா, 9 சீத்தா, 4 ராம்சீத்தா, 10 பலா, 3 சாத்துக்குடி, 2 ஆரஞ்சு, 3 பப்ளிமாஸ், 3 நாரத்தை, 3 சிறுநெல்லி, 15 தேக்கு, 15 குமிழ், 20 மகோகனி, 4 அத்தி, 3 எலுமிச்சை, 10 செண்பகம் உட்பட 740 மரங்களை வைத்திருக்கும் விவசாயி விழுப்புரம் மாவட்டம் குமாரம் கிராமத்தைச் சேர்ந்த சோமு. தோட்டத்தைச் சுற்றி உயிர்வேலி போட்டு அதில் வெற்றிலைக்கொடியை ஏற்றிவிட்டிருக்கிறார்.

வரப்புகளில் வெட்டிவேர் நடவு செய்திருக்கிறார். ஒன்றரை ஏக்கரில் வேலையாட்கள் கூலி ரூ.1,20,000 போக நிகர லாபமாக ரூ.2,69,000 பார்க்கிறார். **தொடர்புக்கு**: சோமு, மொபைல்: 94420 86431.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**முழு நீள காராமணி சாகுபடி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2011,00:00 IST



காராமணியை குளிர்காலம் மற்றும் கடும் மழை பெய்யும் காலம் இவைகளைத் தவிர்த்து இதர மாதங்களில் சாகுபடி செய்யலாம். காராமணி ஆடி-ஆவணிப் பட்டத்தில் மானாவாரி நிலங்களை மழையை நம்பி சாகுபடி செய்யப்படுகின்றது.

காராமணியை காய்கறியாக பயன்படுத்தவே சாகுபடி செய்யப்படுகிறது. சிறிய அளவில் சாகுபடி செய்ய குச்சி நட்டு அதன்மேல் படர விடலாம். பொதுவாக தரையில் வளரும்படியே இதனை சாகுபடி செய்யப்படுகிறது. காய்கறி வகை காராமணியில் சாகுபடிக்கு ஏற்ற இரண்டு ரகங்கள் உள்ளன. என்.எஸ்.634 என்ற ரகம் நல்ல பசுமை நிறத்துடன் காணப்படும். இதன் காய்கள் ஒன்றரை அடி நீளம் கொண்டதாக இருப்பதோடு பார்ப்பதற்கு உருண்டு காணப்படும். இதில் சதைப்பற்று குறைவாக இருப்பினும் நாரே கிடையாது.

காய்கள் சுவையாக இருக்கும். அடுத்து என்.எஸ்.620 ரகம் பார்ப்பதற்கு வெளிர்பச்சை நிறத்தில் இருக்கும். காய்கள் கயிறு போல் நீளமாக இருக்கும். காய்கறி வகை காராமணி ரகங்கள் மக்களால் அதிகம் விரும்பப்படுகிறது. நுகர்வோர்கள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். தேவையான அளவு புரதச்சத்து உள்ளது. காய்கறி வகை காராமணி சாகுபடியானது மிகவும் சுலபமாக உள்ளது. காற்றிலுள்ள தழைச்சத்தினை தனது வேர் முடிச்சுகளில் சேகரித்து வைத்துக்கொள்ளும் திறன் பெற்ற இந்த பயிர் அதிக அளவு ரசாயன உரங்களும், இயற்கை உரங்களும் இல்லாமலே நல்ல

வளமான மண்ணில் சாகுபடி செய்யப்படுகின்றது.

**சாகுபடி முறை**: சாகுபடிக்கு தேர்ந்தெடுத்த மண் நல்ல வடிகால் வசதியைக் கொண்டிருக்க வேண்டும். நிலத்தை கட்டிகள் இல்லாமல் உழுது இயற்கை உரங்களை இடலாம். இயற்கை உரங்களை இடுவதற்கு முன் அவைகளில் உள்ள கண்ணாடிகள், கற்கள் மற்றும் இதர கலப்படங்களை அகற்றிவிட்டு உரத்தினை நன்கு பொடிசெய்துவிட்டு சாகுபடி நிலத்தின்மீது சீராகத் தூவவேண்டும்.

உடனே எருக்கள் நிலத்தில் மண்ணோடு நன்கு கலக்க உழவேண்டும். உழுவது மிக ஆழமாக இல்லாமல் எருவினை மண்ணோடு நன்கு கலக்கும்படி செய்யப்பட்டிருக்க வேண்டும். விவசாயிகள் சொந்தமாக தயாரித்த உரங்களை ஏக்கருக்கு 5 டன் வரை இடலாம். சாகுபடி நிலத்தில் போதிய வளம் இல்லாத சூழ்நிலையில் உழவு செய்யப்பட்ட பின், விதைப்பதற்கு முன் அடி உரமாக யூரியா 25 கிலோ, சூப்பர் 125 கிலோ மற்றும் பொட்டாஷ் 35 கிலோ இவைகளை ஒன்றாக கலந்து ஒரு ஏக்கர் நிலத்திற்கு இடவேண்டும். மறுபடியும் உழவு செய்துவிட்டு இரண்டு அடி இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும்.

இவ்வாறு தயார்செய்த பாரில் அரை அடி இடைவெளியில், விதையினை வரிசையில் ஊன்ற வேண்டும். விதை சீராக முளைப்பதற்கு பாசனம் கொடுப்பதோடு, அடுத்துவரும் பாசனங்களை கவனமாக கொடுக்க வேண்டும். பாசனம் சமயம் நீர் தேங்குமளவிற்கு செய்யக்கூடாது. பயிர் சீராக வளர்ச்சிபெற வாரத்திற்கு இரு முறை பாசனம் தரவேண்டும். பயிரில் களை எடுப்பதற்கு நல்ல கவனம் கொடுக்க வேண்டும். நிலத்தை கொத்திவிடும்போது மேலாக செதுக்க வேண்டும். அதிக ஆழமாக செய்யக்கூடாது. செடிகள் வளரும்போது குச்சி நட்டு அதன் மேல் படர விடலாம். இதனால் காய்களை சுலபமாக அறுவடை செய்யலாம்.

அதிக செலவு ஏற்படுவதால் நடைமுறையில் இது சாத்தியப்படுவதில்லை. செடிகளை பாத்தியில் அப்படியே வளர விடப்படுவதைத் தவிர வேறு வழி இல்லை. விதை நட்ட 60 நாட்களுக்கு பிறகு அறுவடை வரும். காய்கள் பராமரிப்பு பணியைப் பொறுத்து ஒன்றரை முதல் இரண்டு அடி நீளத்தை காய்கள் அடையும்.

**பொருளாதாரம்**: இந்தப்பயிரை அரை ஏக்கரில் (50 சென்ட்) சாகுபடி செய்ய ரூ.6,650 செலவாகும். அரை ஏக்கர் மகசூலின் மதிப்பு ரூ.12,000 (ரூ.1,500 x 8), அரை ஏக்கரில் லாபம் ரூ.5,350.-

எஸ்.எஸ்.நாகராஜன்.

**கரும்பில் எலி கட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2011,02:35 IST

மதுரை : ""ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டின் மூலம் கரும்புப் பண்ணையில் எலிகளை ஒழிக்கலாம்,'' மதுரை விவசாயக் கல்லூரியின் சார்பில் ஆலோசனை வழங்கப்பட்டது. கோவை வேளாண் பல்கலை பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் ஜோனாதன், நீர்,நிலவளத்திட்ட ஒருங்கிணைப்பாளர் இந்திராணி, கல்லூரி பேராசிரியர் முகமது ஹாரூன் கூறியதாவது: மதுரை விவசாயக் கல்லூரி மண் மற்றும் சுற்றுப்புற சூழலியல் துறை சார்பில், நீர், நிலவளத் திட்டத்தின் கீழ் சிவகங்கையில், 128 எக்டேர் பரப்பளவில் துல்லிய கரும்பு பயிரிடப்பட்டுள்ளது.

மண்ணுக்குள் பதிந்துள்ள சொட்டுநீர்ப் பாசன குழாய்கள் மற்றும் கரும்பின் அடிப்பகுதி, நுனிப்பகுதிகளை எலிகள் சேதப்படுத்துகின்றன. சாகுபடி அல்லாத காலத்தில் வயல்களில் உள்ள எலிவளைகளை தேடி அழிக்க வேண்டும். இனப்பெருக்க காலத்தில் எலி வளைகளில், அலுமினியம் பாஸ்பைடு மாத்திரைகளை இட்டு மூடிவிடலாம். தண்ணீருக்காக தான் குழாய்களை சேதப்படுத்துகின்றன. தரையோடு மண்கலயங்களை பதித்து தண்ணீர் நிரப்பி, வாரம் ஒருமுறை தண்ணீரில் அரைமூடி பூச்சிக் கொல்லி மருந்தை கலக்க வேண்டும்."ரேட்டால்' மருந்தை தக்காளி அல்லது தேங்காயில் தடவி, வயலில் ஆங்காங்கே வைக்கலாம். அவித்த நெல், அரிசிப்பொரி, முளைகட்டிய தானியங்கள் ஏதேனும் ஒன்றுடன் 100 கிராம் குருணை மருந்தை கலந்து காயவைத்து, ஆங்காங்கே வைத்து எலிகளை கட்டுப்படுத்தலாம்.

**சிட்டம்பட்டியில் 62 மி.மீ., மழை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2011,02:34 IST

மதுரை :மதுரையில் பரவலான மழை பெய்த நிலையில், அதிகபட்சமாக சிட்டம்பட்டியில் 62 மி.மீ., மழை பதிவானது. பெரியாறு 7.2, தேக்கடி 45.6, கூடலூர் 25, சண்முகாநதி 16, உத்தமபாளையம் 22, வீரபாண்டி 50, வைகை அணை 13, மஞ்சளாறு 25, மருதாநதி 9, சோத்துப்பாறை 22, பேரணை 3, குப்பனம்பட்டி 4.3, ஆண்டிப்பட்டி 7, மதுரை 10, சாத்தையாறு 23, மேட்டுப்பட்டி 32, கள்ளந்திரி 36, புளிப்பட்டி 6, மேலூர் 14, தனியாமங்கலம் 22.5, இடையபட்டி 48, கொடைக்கானல் 12.6, விரகனூரில் 33 மி.மீ., மழை பதிவானது. பெரியாறு அணை நீர்மட்டம் 114.80 அடி, நீர் வரத்து விநாடிக்கு 1014 க.அ., வெளியேற்றம் 688 க.அ.,வைகை அணை நீர் மட்டம் 52.23 அடி. நீர்வரத்து விநாடிக்கு 2,213 க.அ., 960 க.அ., நீர் வெளியேற்றப்படுகிறது.

**திருந்திய நெல் சாகுபடி முறையில் பாதிப்பில்லை மழை, நோய்க்கும் தாக்குப் பிடிக்கிறது**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2011,02:34 IST

மதுரை : ""திருந்திய நெல் சாகுபடி முறையில் மழையாலும் பயிர்கள் சேதமடையாது," என விவசாய அதிகாரி தெரிவித்தார். மதுரை மாவட்டத்தில் பருவமழை இன்னும் துவங்காத நிலையில், தினமும் மழை பெய்வதால் தாளடி, சம்பா பருவ நெல் சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். முதற்கட்டமாக நடந்த குறுவை சாகுபடி செய்த பல விவசாயிகளின் நெற்கதிர்கள் இப்போது அறுவடையாகின்றன. இதில் பல இடங்களில் ஆடுதுறை 45ரக நெற்பயிர்கள் மழையால் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன.
இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இரண்டாம் போக தாளடி, சம்பா சாகுபடிக்கு நிலங்களை விவசாயிகள் தயார் செய்கின்றனர். இங்கு நாற்றங்கால் தயார் செய்யும் பணி தீவிரமடைந்துள்ளது. மதுரை கிழக்கு யூனியனில் குறுவையில் 2500 எக்டேரில் நெல் சாகுபடி செய்தனர். இதில் திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிட்டவர்களின் 1500 எக்டேர் நெற்பயிர்களுக்கு பாதிப்பு இல்லை. அதே சமயம் பாரம்பரிய முறையில் பயிரிட்ட விவசாயிகளின் நெற்கதிர்கள் பாதிப்படைந்துள்ளன. பாதிப்படைந்த விவசாயிகள் உடனே நெற்கதிர்களை அறுவடை செய்ய வேண்டும்.

இல்லையெனில் சாய்ந்த பயிர்கள் முளைவிடத் துவங்கிவிடும். அதற்கு முன்பாக நிலங்களில் தேங்கிய தண்ணீரை எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக வடியச் செய்துவிட வேண்டும், என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.சம்பா சாகுபடியில் இயந்திர நடவுக்கு தேவையான நாற்றுக்களை, சிவகங்கை சாணாப்பட்டியில் இருந்து விவசாயிகள் வாங்கி வருகின்றனர். மதுரை மாவட்டத்தில் போதிய தொழிலாளர்கள், வாய்ப்புகள் இல்லாத நிலையில், விதைகளை அவர்களிடம் கொடுத்தால், 14 நாட்களில் நாற்றுக்களாக தருகின்றனர்.

இதற்கென்றே சிலர் நாற்றங்கால் தயார் செய்வதை தொழிலாக செய்கின்றனர்.கிழக்கு யூனியன் விவசாய உதவி இயக்குனர் எஸ்.கனகராஜ் கூறியதாவது: மதுரை மாவட்டத்தில் லட்சுமிபுரம், மாங்குளம் பகுதியில் இயந்திரம் மூலம் நடவு துவங்கிவிட்டது. திருந்திய நெல்சாகுபடி செய்தால் விதைநெல், தண்ணீர், இடுபொருள் என பலவழிகளில் விவசாயிகளுக்கு சேமிப்பு கிடைக்கும்.

மேலும் பூச்சிகள், நோய் மற்றும் எலி தாக்குதலில் இருந்து பயிரை காக்கலாம். இதுதவிர மழை அதிகம் பெய்தாலும், நெற்பயிருக்கு பாதிப்பு ஏற்படாது. இயந்திர நடவு தேவைப்படும் விவசாயிகள் விவசாய விரிவாக்க அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம், என்றார்.

**விதைகளுக்கு காற்றோட்டம் இணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2011,21:24 IST

திண்டுக்கல் : ""விதைகளை காற்றோட்டமாக பராமரிக்க வேண்டும்,'' என, விதை ஆய்வு இணை இயக்குனர் கோபால் தெரிவித்தார். திண்டுக்கல்லில் விதை விற்பனை நிலையங்கள், சேமிப்பு அறைகளை ஆய்வு செய்த அவர் கூறியது: விவசாயிகளும், விதை விற்பனையாளர்களும் விதைகள் நல்ல காற்றோட்டம் இருக்குமாறு, பராமரிக்க வேண்டும். விதை விற்பனை குறித்த அறிக்கைகள் அனுப்ப வேண்டும், என்றார்.திண்டுக்கல் விதை பரிசோதனை நிலையம், விவசாயிகளின் விதைப் பண்ணைகளை பார்வையிட்டார். விதைச் சான்று உதவி இயக்குனர் செல்வன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சூரியகாந்தி விதையின் விலை "கிடுகிடு' உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2011,21:30 IST

சிவகங்கை : எண்ணெய் வித்து பயிரான சூரியகாந்தி விதைகளின் விலை கிலோவிற்கு ரூ.34 வரை உயர்ந்துள்ளது.எண்ணெய் வித்து பயிர் உற்பத்தியில், சூரியகாந்தி நான்காவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு காரீப் பருவத்தில் தமிழகத்தில் சூரியகாந்தி விதை உற்பத்தி 3.2 லட்சம் டன்னாக இருந்தது. முதல் இரண்டு மாதத்திற்கு உற்பத்தி 1..35 லட்சம் டன்னாக உள்ளது.

தற்போது, தாவர எண்ணெய் மொத்த இறக்குமதி 14.21 லட்சம் டன்களாக உள்ளன. இது கடந்த ஆண்டில் 15.41 லட்சம் டன்னாக இருந்தது.எண்ணெய் இறக்குமதியில் பாமாயில் 7 மில்லின் டன், சோயா எண்ணெய் 1.4 மில்லியன் டன், சூரியகாந்தி எண்ணெய் 6 லட்சம் டன்னாகவும், இதர எண்ணெய் வகைகள் 15,000 டன்னாகவும் உள்ளது.

தமிழகத்தில் சூரியகாந்தி 0.29 லட்சம் எக்டேரில் 0.34 லட்சம் டன் உற்பத்தியாகிறது. எக்டேருக்கு தலா 1,334 கிலோ விதை உற்பத்தியாகிறது.கரூர், திருச்சி, திண்டுக்கல், தூத்துக்குடி, திருவண்ணாமலையில் சூரியகாந்தி அதிகளவில் பயிரிடப்படுகிறது.

வரத்து அதிகரிப்பு: சித்திரையில் நடவு செய்த பயிரில் இருந்து சூரியகாந்தி விதை தற்போது அதிகளவில் வரத்து உள்ளன. இது வரை ஒரு கிலோ விதை 27 ரூபாய்க்கு விற்று வந்தது. இம்மாதத்தில் இருந்து சூரியகாந்தி விதை விலை கிலோவிற்கு 34 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

விவசாயத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: சூரியகாந்தி விதைக்கு நல்ல விலை கிடைத்துள்ளது. நவம்பர் வரை இந்த விலை நீடிக்கும். எனவே இருப்பு வைத்துள்ள விவசாயிகள் உடனே, விதையை விற்று லாபம் பெறலாம் என்றார்.

---

## *நடப்பு நிதி ஆண்டில் பருப்பு இறக்குமதி அதிகரிக்க வாய்ப்பு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*இந்தியாவில், நடப்பு நிதி ஆண்டில், பருப்பு வகைகள் இறக்குமதி அதிகரிக்கும் என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது.*

*நம் நாட்டில் உற்பத்தியைக் காட்டிலும் தேவைப்பாடு அதிகமாக உள்ளதால் ஆண்டுதோறும் கணிசமாக பருப்பு இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. நடப்பு ஆண்டு கரீஃப் பருவத்தில் பருப்பு விளைச்சல் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே பருப்பு இறக்குமதியும் அதிகரிக்கும் என தெரிகிறது.*

*இந்தியா பொதுவாக ஆண்டுக்கு 30–40 லட்சம் டன் பருப்பு இறக்குமதி செய்கிறது. சென்ற நிதி ஆண்டில் பருப்பு வகைகள் மகசூல் 1.81 கோடி டன்னாக அமோக வளர்ச்சி கண்டது. எனவே இறக்குமதியும் கணிசமாக குறைந்தது. முதல் கட்ட மதிப்பீடுகளின்படி கடந்த நிதி ஆண்டில் பருப்பு இறக்குமதி 26 லட்சம் டன் என தெரிய வந்துள்ளது. இது, முந்தைய நிதி ஆண்டில் 35 லட்சம் டன்னாக இருந்தது.*

அதாவது குறைந்தபட்ச சராசரி அளவான 30 லட்சம் டன்னுக்கும் கீழாக இறக்குமதி குறைந்துள்ளது.

## உரவிலை அதிகரிப்பால் சிறு தேயிலை விவசாயிகள் அவதி

குன்னூர், அக்.19–

நீலகிரி மாவட்டத்தில் உர விலை அதிகரிப் பால் தேயிலை விவ சாயிகள் அவதி அடைந் துள்ளனர்.

தேயிலை விவசாயம்

நீலகிரி மாவட்டத்தில் பருவநிலை மாற்றம் காரண மாக காய்கறி விவசாயத்தில் இருந்து சிறு விவசாயிகள் தேயிலை விவசாயத்திற்கு மாறினர். இதனால் நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயமே முக்கிய தொழி லாக மாறியது. தேயிலை சாகுபடி முறையை தென் மண்டல தேயிலை வாரி யமும், உபாசி வேளாண்மை அறிவியல் மையமும் இணைந்து சிறு விவசாயி களுக்கு பல்வேறு ஆலோச னைகளை வழங்கி வருகின் றன. தற்போது தேயிலை வாரியம், உபாசி வேளாண்மை அறிவியல் மையம் ஆகியவற் றின் அறிவுரையின் பேரில் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தரமான பச்சை தேயிலையை தயாரித்து வருகின்றனர்.

உரமிடுதல்

இதன் காரணமாக தேயிலைக்கு கூடுதல் விலை கிடைத்து வருகிறது. தேயிலை சாகுபடியில் உரமிடுதல் முக்கிய அங்கம் வகிக்கிறது. உபாசி வேளாண்மை மைய அறிவுரைப்படி ஆண்டுக்கு 3 முறை உரமிட வேண்டும்.உரத்தின் அளவை குறைத்து, இவ்வாறு 3 முறை இட சிறு விவசாயிகள் அறிவுறுத்தப் படுகின்றனர். இதன் அடிப் படையில் சிறு விவசாயிகள் தேயிலை தோட்டத்தில் உள்ள செடி களுக்கு அம்மோனியா பேஸ், யூரியா பேஸ் ஆகிய இரு உரங்களை இடுகிறார் கள். அம்மோனியா பேஸ் உரத்தில் தலைச்சத்து உரமான அம்மோனியாவும், சாம்பல் சத்து உரமான பொட்டா சியமும் கலந்து உள்ளன. யூரியா பேஸ் உரத்தில் தலைச்சத்தான யூரியாவும், சாம்பல் சத்தான பொட்டா சியமும் கலந்து உள்ளன.

உரம் பற்றாக்குறை

மே முதல் ஜூன் வரை உள்ள மாதங்களில் அம்மோ னியா பேஸ் உரம் தேயிலை செடிகளுக்கு இடப் படுகிறது. அதன் பின்னர் யூரியா பேஸ் உரத்திற்கு அதிக ஈரம் தேவைப்படும். வட கிழக்கு பருவமழை காலமான அக் டோபர், நவம்பர் மாதங்களில் விவசாயிகள் இந்த யூரியா பேஸ் உரத்தை இடுகிறார் கள்.

கடந்த சில மாதங்களாக தேயிலைக்கு உடும் உரத்திற்கு பற்றாக்குறை இருந்து வந்தது. இந்த பற்றாக்குறை விலை ஏற்றத்திற்கு அறிகுறியாக இருந்தது. தற்போது அம்மோனியா பேஸ் 520 ரூபாயில் இருந்த 650 ரூபாயாகவும், யூரியா பேஸ் உரம் 370 ரூபாயில் இருந்து 540 ரூபாயாக விலை உயர்வு செய்யப்பட்டு உள்ளது.

இதற்கு பொட்டாஷ் உரத்தின் விலை உயர்வே காரணம் என்று கூறப்படுகிறது. பொட்டாஷ் உரத்திற்கு அரசு 240 ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளதாக கூறப் படுகிறது. உர விலை அதிகரிப்பு காரணமாக சிறு தேயிலை விவசாயிகள் மழை காலமான தற்போது உரம் வாங்கி, செடிகளுக்கு இடுவதற்கு தயங்கி வருகின்றனர்.

தரம் இழக்கும் அபாயம்

இந்த தயக்கம் காரணமாக தேயிலை செடிகள் தரம் இழக்கும் அபாயமும் ஏற்பட்டு உள்ளது. இது குறித்து சிறு விவசாயி ஒருவர் கூறியதாவது:–

நமது இந்திய நாடு விவ சாயத்தை சார்ந்து உள்ளது. விவசாய விளை பொருட் களுக்கு உரமிடுவது முக்கிய பங்காக உள்ளது. மத்திய அரசு உரத்தின் விலையை உயர்த்தி உள்ளது. கடந்த ஒரு வருடத் திற்கு முன்பு 320 ரூபாயாக இருந்த யூரியா பேஸ் உரம், 370 ரூபாயாக விலை உயர்வு செய்யப்பட்டு தற்போது 50 கிலோ கொண்ட ஒரு மூடை 540 ரூபாய் என்று விற்பனை செய்யப்படுகிறது

உரத்திற்கு அதிக தொகை கொடுக்கும் நிலை ஏற்படும் போது விவசாயி கையில் இருந்த செலவு செய்ய வேண்டிய நிலை உள்ளது. விவசாய விளை பொருட் களுக்கு அரசு மானியம் வழங்க முன்வர வேண்டும். விவசாயத்திற்கு முதுகெலும் பான உரத்திற்கு மானியம் கொடுத்து உர விலையை குறைக்க முன்வர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.